Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 4

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி புரட்டாதி 23 ஆம் நாள் ஜ ஆகிர் பிறை 2 (9-10-64) வெள்ளிக்கிழமை இதழ் 240

போன்: 506 தந்தி: 'வணக்கம்'

ஆ. அப்பையா அன் கோ.

82, கே. கே. எஸ். ரோட், 54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

மாபெரும்

மலிவு விற்பனை

தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை அன்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

# அரசாங்க பிரேரணை செல்லுபடியாகாது

## சபாநாயகர் தீர்ப்பு; எதிர்கட்சியினர் ஆரவாரம்

### உடனடியாக நடைபெற்ற அரசாங்க,மந்திரிசபை கூட்டங்கள்

கொழும்பு, வியாழன்

பத்திரிகை மசோதாவை அடுத்த வருடம் ஒத்திவைக்கவேண்டும் என்ற எதிர்க்கட்சிப் பிரேரணைக்கு எதிராக சபைத் தலைவர் கொண்டுவந்த பிரேரணை செல்லுபடியாகாதென்றும், ஒழுங்கற்றதெனவும், தான் முன்னர் கூறிய தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாதெனவும் இன்று சபாநாயகர் நேற்றைய ஒழுங்குப் பிரேரணை சம்பந்தமான தீர்ப்பில் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் 4 30 மணிக்கு சபைக்கு வந்த சபாநாயகர் தமது தீர்ப்பை வாசித்து 4-05 மணிக்கு சபையை நாளை காலை பத்து மணி வரை ஒத்திவைத்துச் சென்றார். எதிர்க்கட்சியினர் சபாநாயகரை பாராட்டி கரகோஷம் செய்து ஆரவாரித்தனர்.

சபாநாயகரின் இந்த தீர்ப்பை அடுத்து நடைபெற்ற அரசாங்கக் கட்சியின் அவசரக் கூட்டத்தில் ஏரிக்கரைப் பத்திரிகைகளை அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்து மந்திரிசபைக் கூட்டமும் இரவு வெகுநேரம் வரை நடைபெற்றது. மந்திரிசபைக்கூட்டத்தில் அரசாங்கக்கட்சிக் கூட்டத்தின் முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கானமசோதாவை அரசாங்கம் இம்மாதம் 13-ந்திகதி சமர்ப்பிக்கும் எனவும் விவாதம் முடியும்வரை அன்று சபைநிகழ்ச்சிகள் நடைபெறும் எனவும் நம்பப்படுகிறது

சபாநாயகர் பி. ப. 4 மணிக்கு தமது தீர்ப்பை வாசிக்க ஆரம்பித்து 5 நிமிடங்களில் சபையை ஒத்திவைத்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஒட்டிசுட்டான் கொலைவழக்கில் எதிரிக்கு இரு வருட கடூழியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஒட்டிசுட்டான் கொலைவழக்கு நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, விசாரணை நடுவில் எதிரியின் வழக்கறிஞர், சடுதியாக ஏற்பட்ட கோபத்தினால் எதிரி இக்குற்றத்தைச் செய்தார் என நீதியரசரிடம் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து ஜூரிகளின் முடிவை ஏற்றுக் கொண்ட நீதியரசர் எதிரிக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

சாதாரண மறியல்சாலையிலும் பார்க்க விளக்கமறியல்சாலையில் காலத்தைக் கழிப்பது கஷ்டமானதென்று தனக்குத் தெரியுமென தீர்ப்பளிக்குமுன் நீதியரசர் கூறினார்.

ஒட்டிசுட்டான்கொலைவழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச் டபிள்யு தம்பையா சியூ வி முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

### குற்றச்சாட்டு

இவ்வழக்கில் 1963-ம்ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி ஒட்டிசுட்டானில் சோமசேகரம் சந்திரசேகரம் என்பவர் கே. சிதம்பரப்பிள்ளையைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### வழக்கறிஞர்கள்

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. எ. சொக்கலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. ரி. எஸ். ஆனந்தகுமாரசாமி நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரியதரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஐ. ஒபயசேகரா ஆஜரானார்.

### டாக்டர் சாட்சியம்

டாக்டர் பத்மநாதன்

(6-ம் பக்கம் பார்க்க)

## "சூதாட்டத்தில் பணத்தை இழந்த வாலிபன் தற்கொலை"

யாழ்ப்பாணம், வெள்ளி

ஒருவரிடம் இரவலாகச் சயிக்கிளை வாங்கி அடைவு வைத்துவிட்டுக் கிடைத்த பணத்தைச் சூதாட்டத்தின் போது இழந்துவிட்டதனால் ஏற்பட்ட மனவேதனையினால் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தில்லைதேசிகர் என்ற 19 வயது வாலிபர் தற்கொலை செய்துகொண்டார்.

வண்ணார்பண்ணை வடமேற்கிலுள்ள மானிப்பாய் ரோட்டைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை ரத்தினம் என்பவரின் மகனான தில்லைதேசிகரின் மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் சகோதரி பத்மாவதி (25 வயது) சாட்சிய மளிக்கையில் கூறியதாவது:

"நானும் இறந்தவரும் எங்களது பேத்தியாருடன் தான்

(2-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை மசோதாவின் கதி பற்றி பிரதமருக்கு தகவல்

கொழும்பு, வியாழன்

பத்திரிகை மசோதாவை சபையில் சமர்ப்பித்து விவாதிக்க முடியாமற் போனது பற்றியும், எதிர்க்கட்சியினரின் பிரேரணை, சபாநாயகரின் தீர்ப்பு ஆகியவை பற்றியும், சென்ற இரண்டுநாள் சபை நிகழ்ச்சிகள் பற்றியும் லெய்ரோவில் இருக்கும் பிரதமருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக மந்திரிசபை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பத்திரிகை ஏகபோக உரிமையை பறிக்கும் வகையில் ஏரிக்கரைப் பத்திரிகைகளை

(1-ம்பக்கம் பார்க்க)

ராதா குரு பற்பொடி




பற்களை வெண்மையாக்கி, வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது. பல்வலி, பல் அரணை, முரசு கரைதல் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.

தயாரிப்பாளர்கள்: ராதா புறடக்ஸ்

விநியோகஸ்தர்கள்: எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

ஸ்ரீ மனோகரா

(யாழ்ப்பாணம் போன்: 485)

மகத்தான 50வது நாள்



இன்று 2-30, 6-30, 9 30 காட்சி டிக்கட்டுகளில் 10 அதிர்ஷ்ட டிக்கட்டுகளுக்கு விலையுயர்ந்த பரிசுகள் வழங்கப்படும்.

பாலசர்மா ★ அசோகன்

டி. கே.பகவதி ★ நரசிம்மபாரதி

ஜெயஸ்ரீ ★ விஜயலக்ஷ்மி

மற்றும் பலர் நடித்த

சம்பூர்ண மகாபாரதம்

இதுவரை 50,000 ரசிகர்களுக்கு விருந்தளித்த திரைக்காவியம்.

மணிவாக்கு

சரி எது? தவறு எது? தெய்வதத்தின்பால் எந்த எண்ணமோ காரியமோ நம்மைக் கொண்டு செல்லுகிறதோ அதுசரி; தெய்வத்துக்கு மாறாக வேறு திசையில் கொண்டுசெல்வதெல்லாம் தவறு.

— சு ராமிராமதாஸ்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு புரட்டாதி ஸ்ரீ 23 உ (9-10-64)

## வேலையற்றோர் பிரச்னை

இதுவரை என்றுமில்லாதவாறு இலங்கையில் சென்ற ஜூலை மாதத்தில் மட்டும் ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 541பேர் வேலைவேண்டுமெனப் பதிவு செய்துள்ளனராம். இந்த 'சாதனை' பெரும் வேதனையளிப்பதாகும்.

தொழிற்கந்தோர்களில் தங்கள் பெயரைப் பதிவு செய்யாதவர்களையும் சேர்த்தால் வேலையற்றிருப்போர் தொகை இரண்டு லட்சத்துக்கும் அதிகமாகவே இருக்கும். இத்தொகையில் 327 ஆண்களுக்கும் 52 பெண்களுக்கும் தான் ஜூலை மாதத்தில் வேலைகிடைத்தது. இது யானைப் பசிக்கு சோளப்பொரி என்ற கதையாகவே உள்ளது.

பத்தொன்பதற்கும் இருபத்தைந்து வயதுக்கும் உட்பட்ட படித்த இளைஞர்களே பெருந்தொகையினராக வேலையற்றிருக்கின்றனரென்று மத்திய வங்கி எடுத்த கணிப்பிலிருந்து தெரிகிறது. நாற்காலி உத்தியோகத்துக்காக மாணவர்களைத் தயார் செய்யும் பழைய கல்வித் திட்டமே இதற்குக் காரணம் என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் புதிய தேசிய கல்வித் திட்டம் கொண்டு வரப்படுமென்றும் நாட்டுக்கேற்ற கல்வித் திட்டத்தின் கீழ் தொழிற் கல்வியும் பொதுக் கல்வியும் அளித்து நாட்டின் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கப் போவதாகவும் கல்வி மந்திரியும் அரசாங்கத்தினரும் பல்லவி பாடிவந்துள்ளனர். அவர்கள் உறுதியளித்த கல்வித் திட்டம் என்னவாயிற்று?

கல்வித் திட்டம் ஒரு புறமிருக்க, இளைஞர்கள் மத்தியில் வேலையில்லாதோர் தொகை அதிகரித்துள்ளதற்கு அவர்களின் கல்வி 'அந்தஸ்துக்கு' ஏற்ற தொழில்கள் இல்லாமையும் ஒரு காரணம், எதற்கும் அந்நிய ஆட்சி காரணமாக ஏற்பட்ட சமுதாய அமைப்புத்தான் காரணம் என்று கூறலாம். எனினும் காலம் இப்பொழுது மாறிவிட்டது. பொய் கௌரவங்களைப் பாராமல் படித்த இளைஞர்கள் எத்தந் தொழிலையும் செய்ய முன்வர வேண்டும்.

வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கவும் நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்யவும் ஆக்கபூர்வமான அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் செய்யத் தவறியது அதனுடைய குறைதான். திட்டங்கள் தீட்டப்படும் என்றும் பத்து வருடத்திட்டமென்றும், ஐந்து வருடத் திட்டமென்றும் வாயளவில் சொல்வது பயனற்றது. வெறும் கை முழம் போடாது.

அபிவிருத்தித் திட்டங்களை சரியான முறையில் உடனடியாக ஆரம்பிக்கவேண்டியதுடன் உத்தியோகத்துறையிலும் இதர துறையிலும் அந்நிய ஆட்சிக் காலத்தில் கடைப்பிடித்து வந்த முறைகளிலும் மாற்றம் செய்யவேண்டியது அவசியம்.

இதே சமயம் மலைபோல் உயர்ந்துள்ள வேலையில்லாப் பிரச்னையை அரசாங்கம் தீர்த்துவைக்கும் என இளைஞர்கள் இனியும் எதிர்பார்ப்பதில் எவ்விதபயனும் கிடைக்குமென நம்புவதற்கில்லை. தொழில் அந்தஸ்துகளைப் பார்க்காது எத்தொழிலையும் செய்வதற்கு இளைஞர்கள் முன்வருவதுடன் கூட்டுறவு முறையிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ இளைஞர்கள் குறிப்பாகப் படித்த இளைஞர்கள், தங்கள் அறிவாற்றல்களை பிறருக்குப் பயன்படுத்த, தொண்டு மனப்பான்மையுடன் முன்வந்தால், அவர்களை நிச்சயம் இந்த வேலையில்லாப் பிரச்னை அதிகம் பாதிக்காது.

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இந்து மாணவர்களும், ஆசிரியர்களும் நவராத்திரி விழாவை தினமும் சிறப்பாக கொண்டாடிவருகின்றனர்.

விஜயதசமி நாளன்று பகல் இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரை இசைவிருந்தளிப்பார்.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம் சேணிய தெரு ஆங்கில வித்தியாசாலையில் நவராத்திரி ஒன்பது நாட்கள் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாவது நாள் விழாவில் திரு. கே. சோமசேகரம் பங்குபற்றி அறிவுரை வழங்கினர். இதைத் தொடர்ந்து திருவாளர்கள் வி. கணபதிப்பிள்ளை, எஸ். பரமசாமி, ஜே. எஸ். அழகரத்தினம், எஸ். சிவரத்தினம், பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, ஸ்ரீமதி என். நல்லதம்பி, திரு. எஸ். மணிபாகவதர் ஆகியோர் தினமும் அறிவுரை வழங்குவார்கள்.

∴ ∴ ∴

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இந்து மாணவர் மன்றச் சார்பில் நவராத்திரிவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இம்மாதம 12-ம் திகதி இரவு திரு. சி. செல்லத்துரை பக்திப்பாடல்கள் பாடுவார்,

## புனித ஸ்தலங்கள்

தம்புல்ல விகமரைப் பகுதியையும் சிகிரியாப்பகுதியையும் புனித இடங்களாகப் பிரகடனப்படுத்துவதென்று உள்நாட்டு அமைச்சர் திரு. ஏ. பி. ஜெயசூரியா தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இதே சமயம் பௌத்த விகாரைகளும் ஸ்தலங்களும் இருக்குமிடங்கள் மட்டுமல்லாது இதர மதத்தினரின் ஆலயங்களும் ஸ்தலங்களும் உள்ள பகுதிகளின் புனிதத்தன்மையையும் பாதுகாக்க உள்நாட்டு அமைச்சர் முன்வரவேண்டுமென்பதை மீண்டும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் இந்துக்களின் புனித ஸ்தலங்களான திருக்கோணேச்சர ஆலயப்பகுதியையும் திருக்கேதீச்சர ஆலயப் பகுதியையும் புனித நகரங்களாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை அமைச்சர் ஏற்று இரு இடங்களையும் புனித இடங்களாகப் பிரகடனம் செய்வாரென்று நம்புகிறோம்.

## சக்தி பூசை செய்மின்

அன்னையாம் சக்தி பூசை
அன்பொடு சேர்ந்து செய்வீர்
இன்னலா மசுர னஞ்சி
யிறந்திட இருளும் நீங்க
வன்மையே பெருக வஞ்ச
வறுமைநோய் விரண்டு ஓட
நன்மையே சேர என்றும்
நலமொடு நீடு வாழ்வீர்

உரமுறு நெஞ்ச மீவாள்
உலகிலீத் மைகளை வெல்வீர்
அருள்மிகு நெஞ்ச மீவாள்
அரியநற் றெண்டு செய்வீர்
பொருளினைப் பெரிது மீவாள்
புண்ணிய மினிது செய்வீர்
பெருகிய கலைக ளீவாள்
பிறக்கதை உவந்து ஈவீர்

மலர்ந்தஅன் பிதய பீட
மதனிலே யமர விட்டால்
உலகினிற் கேட்ட தெல்லா
முளமகிழ் தீந்து நிற்பாள்
தலைவனு மீசன் தன்னை
தயவொடு காட்டி வைப்பாள்
மலமது நீக்கி மேலாம்
மலரடி சேரு வீரே

—சங்கீத பூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி—

## பழைய மாணவர் மன்றம்

கொழும்பு, வியாழன்

கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய பழைய மாணவர் மன்றத்தின அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 4-ம் திகதி மேற்படி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு. வ. நடராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

போஷகர்: திரு. வ. நடராசா, உபபோஷகர்: திருமதி பா. இராசேந்திரம். தலைவர்: திரு. இரா. திரிசங்கு, இணைக் காரியதரிசிகள்: திரு. கு. இராமச்சந்திரன், திரு. பா. கதிரேசன். தனாதிகாரி: திரு. மு. சந்திரன், செயற்குழு உறுப்பினர்கள்: திரு. க. நவசோதி, திருமதி அசலாம்பிகை நடராசா, செல்வி அ. சீதாலெட்சுமி.

## தூதாட்டத்தில் . . :

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வில்லத்தில் இருந்தோம். தகப்பனார் கொழும்பில் வியாபாரம் செய்துகொண்டிருக்கிறார். சம்பவம் நடந்த தினம் நானும் பேத்தியாரும் வீட்டின் பின்பக்கத்தில் இருந்தோம். நான் வீட்டின் ஹோலுக்குள் வந்தபோது மேல் வளையில் கட்டப்பட்ட கயிறொன்றில் தம்பி கழுததில் சுருக்கிட்ட நிலையில் திணறிக்கொண்டிருந்தான். நான் உடனே கயிற்றை அறுத்துவிட்டேன். ஐயோ ஐயோ என்று சத்தம்போட்டேன். பின் என்ன நடந்ததென்பது எனக்கே தெரியாது.

விசாரணையின்போது பத்மாவதியின் அவலக்குரல் கேட்டு ஓடிவந்த பக்கத்து வீட்டு வேலுப்பிள்ளை கந்தையா, இறந்தவரின் பேத்தியார் பொன்னம்மா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இறந்தவரின் சட்டைப் பையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

'நான் எத்தனையோ விதமான குற்றங்களைச் செய்திருக்கிறேன். அவைகளிலிருந்து தப்பியிருக்கிறேன். ஆனால் இப்போது என் மானமே போனபின் வாழ்வதற்கு எனக்குப் பிடிக்கவில்லை, எனவேதான் இந்த உலகத்தை விட்டுப்போகத் தீர்மானித்தேன். கூடப்பிறந்த குற்றத்திற்காக அக்கா, தம்பி, எல்லாருமே என்னை மன்னித்துவிடுங்கள்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். கனகரத்தினம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## இந்திய தீர்மானம் அங்கீகாரம்

கெய்ரோ, அக். 8

சைப்ரஸின் சுதந்திரத்தையும் ஒற்றுமையையும் பிரதேச உரிமையையும் சகலநாடுகளும் மதிக்க வேண்டுமென இந்தியா சமர்ப்பித்த தீர்மானம் கெய்ரோ நடுநிலைமை உச்சி மகாநாட்டின் அரசியல் கமிட்டியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## கலைப்புலவர் ஞாபகார்த்த நூல்நிலையம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகரசபை நூல்நிலையக் கமிட்டி யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். வி. மகாதேவா தலைமையில் நடைபெற்றபோது, காலம் சென்ற கலைப்புலவர் நவரத்தினம் பாவித்துவந்த நூல்நிலையத்தை வாங்குவதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க மூன்று பேர்கொண்ட குழு ஒன்று நியமிக்கவேண்டுமென திரு. டி.ஏ. சபாரத்தினத்தினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை கமிட்டியால்ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. எஸ். யு. சோமசேகரம், திரு. டி. ஏ. சபாரத்தினம், திரு. ஏ. ஈ. தம்பர் ஆகியோர் இக்குழுவில் அங்கத்துவம் வகிக்க வேண்டுமென மாநகரசபை அங்கத்தவர் திரு. எஸ். நாகராசா தெரிவித்தார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

களுக்குச் செய்யப்பட்ட குற்றங்களையும் தாங்கள் மன்னிப்பதாயும் அத்தீர்மானம் கூறுகின்றது,

தான் செய்த தவறை உணர்ந்து அதற்கு மன்னிப்புக் கேட்பதற்கு மனப்பக்குவம் அதிகம் வேண்டும். இது சுலபமல்ல. இப்போது வத்திக்கானிலே கத்தோலிக்கசபை செய்த தீர்மானம் பலமதங்களிடையேயும் இனி ஒற்றுமை ஏற்படவும் புதிய வழிகாட்டுவதாக உள்ளது.

* * *

சக்தியென்று புகழ்ந்திடுவோம் முருகன் என்போம்; சங்கரனென றுரைத்திடுவோம் கண்ணன் என்போம்; நித்தியமிங் கவன்சரணே நிலையென்றெண்ணி, நினக்குள்ள குறைகளெல்லாம் தீர்க்கச் சொல்லி, பக்தியினாற் பெருமையெல்லாம் கொடுக்கச் சொல்லி, பசிபிணிகளில்லாமற் காக்கச் சொல்லி, உத்தம நன்னெறிகளிலே சேர்க்கச்சொல்லி, உலகளந்த நாயகிதான் உரைப்பாய் நெஞ்சே.

— மகாகவிபாரதியார்

## ஐயாறன் எழுதுவது

முன்னர் சிலர் நமதுகோவில்களை இடித்து ஆட்சிவர்க்கம் மதக்கொடுமை செய்ததால், ஒரு கோவிலுக்கு பத்துக் கோயில் வீதம் எழுந்தன. யாழ்ப்பாணத்திலே பல பல கோவில்கள் இருப்பதற்கும் இதுதான் காரணமாகும்.

இப்போது பத்திரிகைச்சட்டம் வரும் சமயத்தில் பல புதிய பத்திரிகைகள் வெளியாவதாகத் தெரிகிறது. கொழும்பிலிருந்து 'தவஸா' ஸ்தாபனத்தார் ஓர் ஆங்கில தினசரிப் பத்திரிகையை சீக்கிரத்தில் வெளியிடப் போகிறார்களாம். ஒரு தமிழ் தினசரியும் அவர்கள் வெளியிட உத்தேசமென்று தெரிகிறது. யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களிலிருந்து புதிய தமிழ் சஞ்சிகைகள் வெளியாகியுள்ளன.

பத்திரிகைச் சட்டம் அமுலுக்கு வந்தால் புதிய பத்திரிகைகள் ஆரம்பிக்க முடியாமல் என்னென்ன புதிய தடைகள் ஏற்படுமோ என்று இப்போதே அவசரமாக புதிய பத்திரிகைகளை வெளியிடுகிறார்கள் போலும், இன்னும் பல வெளியாகலாம்.

தமிழ்நாட்டிலே ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு தினசரிப் பத்திரிகை தோன்றி வருகின்றது, அப்படிப் பார்ப்பின் இலங்கையில் இன்னும் பல பத்திரிகைகள் பிரசுரமாக இடமுண்டு. அதிக பத்திரிகைகள் வெளியாவது பொதுமக்களுக்கு நல்லதே. ஆங்காங்கேயுள்ள குறைகள் அம்பலமாகவும் மக்கள் நல்வாழ்வு வாழவும் மாவட்டப் பத்திரிகைகள் எவ்வளவோ தொண்டாற்ற முடியும்.

* * *

பார்லிமெண்ட்சபையிலேபத்திரிகை மசோதாமீது நடக்கும் காரசாரமான ஏச்சுப் பேச்சுகளைப் படிக்க ருசியாக உள்ளது. நேற்றுவரை நண்பர்களாக இருந்த எம். பி. மார்கள் இன்று எலியும் பூனையும்போல் மாறிவிட்டார்கள். சபையில் இப்படிப் பேசவும் உரிமை இருப்பது ஜனநாயகத்தின் ஒரு சிறப்பு அம்சமல்லவா? 18 வது முறையாக திருத்தப்பட்டதாம் இந்த பத்திரிகைகள் மசோதா. வருகிற 18ந் திகதி இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று அரசாங்கக் கட்சியினர் கேட்கின்றனர். அடுத்த பெப்ரவரிக்கு இதை ஒத்திவைக்கவேண்டுமென்ற யோசனைக்குச் சாதகமாக சபைத் தலைவர் அளித்த தீர்ப்பு அரசாங்கத்துக்குப் பெரிய இடிபோலாகிவிட்டது. இத்தீர்ப்பிலிருந்து தப்பி, அவசரமாக இம்மசோதாவை நிறைவேற்றிவிட அரசாங்கக் கட்சியினர் துடிக்கின்றனர். சபையில். மெஜாரிட்டிபலம் தங்கள் கையில் இருப்பதால் எப்படியும் இதைச் செய்துவிடப்பார்க்கின்றனர். என்ன நடக்கிறதோ பார்க்கலாம்!

* * *

கிறிஸ்தவ மதத்துக்குள்ளாக பிளவு ஏற்பட தங்களால் செய்யப்பட்ட பங்குக்காக மற்ற கிறிஸ்தவர்களிடம் கத்தோலிக்கர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று வத்திகானில் கூடிய கத்தோலிக்க கவுன்ஸில் பெருவாரியான வாக்குகளால் தீர்மானித்துள்ளது. 2076 பேர் சாதகமாகவும் 92 பேர் பாதகமாகவும் இந்த "மனமாற்ற" முயற்சிக்கு வாக்குச் செய்ததாக ஒரு செய்தி கூறுகிறது. இது பெரிதும் வரவேற்கத்தக்கதுடன் கிறிஸ்தவர்களிடையே புதிய ஒற்றுமை ஏற்படவும் நல்லதோர் சகுனமுமாகும்.

'பிரிவினைப் பாவ'த்திலே எல்லாருக்குமே பொறுப்பு உண்டென்றும் இதற்காக ரோமன் கத்தோலிக்கர் கடவுளிடமும் பிரிந்த சகோதரர்களிடமும் மன்னிப்புக் கேட்பதாயும் தங்

(4-ம் கலம் பார்க்க)

ஐ. அ. குடியரசு – காங்கோ தகராறு

# கெய்ரோவில் காங்கோ பிரதமர் ஷோம்பே

## இன்னும் காவலில் இருக்கிறார்

### தூதராலய முற்றுகையை நீக்கினாலொழிய அவரை விடுதலை செய்ய மறுப்பு

### உணவருந்தாமல் ஷோம்பே "சத்தியாக்கிரகம்"

கெய்ரோ, அக். 8

காங்கோவில் ஐக்கிய அராபியக் குடியரசு தூதராலயத்தைச் சுற்றிப் போடப்பட்டிருக்கும் ராணுவ முற்றுகையை அகற்றினாலொழிய, ஷோம்பேயை காவலிலிருந்து விடமுடியாது என கெய்ரோ அரசாங்கம் அறிவித்திருக்கிறது. காங்கோ தலைநகர் லியப்போல்ட்விலியில் ஐக்கியஅராபியக் குடியரசு, அல்ஜீரியா ஆகிய நாடுகளின் தூதராலயங்களைச்சுற்றி ராணுவம் வளைத்துக் கொண்டிருப்பது தெரிந்திருக்கும்.

எகிப்திய, அல்ஜீரிய ராஜதந்திரிகள் தூதராலயத்திலிருந்து பத்திரமாக வெளியேற அனுமதியளிக்காதவரைஷோம்பேயை கெய்ரோவிலிருந்து வெளியேற அனுமதியளிக்க முடியாது என காங்கோ அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

லியப்போல்ட்விலியில் எகிப்திய அல்ஜீரிய தூதராலயங்களிலிருந்து எவரும் வெளியே வரவோ, உள்ளே செல்லவோ அனுமதியளிக்கப்படவில்லை. அதேபோல் ஷோம்பே இப்போது காவலில் வைக்கப்பட்டிருக்கும் கெய்ரோ விருந்தினர் விடுதிக்குள் எவரும் வரவோ, வெளியேசெல்லவோ அனுமதியளிக்கப்படவில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து ராஜதந்திரிகளைப் பாதுகாப்பதற்காகவே காங்கோவில் தூதராலயத்தைச் சுற்றிக் காவல் போடப்பட்டிருக்கிறது என அரசாங்கம் கூறியது. ஆனால் தங்களுக்கு எதிராக எவ்வித ஆர்ப்பாட்ட அறிகுறியையும் தாங்கள் காணவில்லையென்றும் ராணுவக் காவல் விலக்கப்பட்டு நடமாடும் சுதந்திரம் இருக்க வேண்டுமெனவும் ஐ. அ. கு. தூதர் லியப்போல்ட்வில்லியில் கூறினார்.

#### உணவருந்த மறுக்கிறார்

இதற்கிடையில் காவலிலிருக்கும் ஷோம்பே ஐக்கிய அராபியக் குடியரசு அதிகாரிகளால் கொடுக்கப்படும் உணவைச் சாப்பிட மறுத்து வருவதாய் அறிவிக்கப்பட்டது. இதுவரை இங்குள்ள காங்கோ ராஜதந்திரிகள் தான் அவருக்கு உணவு அனுப்பி வந்ததாயும் கூறப்படுகிறது.

## பாக்.—சீனா உதைபந்தாட்டம்

பீகிங், அக். 8

நேற்று பீகிங்கில் சீனாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சீனா 12 கோல் போட்டு வெற்றிபெற்றது. பாகிஸ்தான் கோல் எதுவும் போடவில்லை.

## ஒலிம்பிக் கிரகம்

கேப் கென்னடி, அக். 8

டோக்கியோ ஒலிம்பிக்கை டெலிவிஷனில் காட்டும் அமெரிக்க செயற்கைக்கிரகம் நேற்று வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது.

## அவசரகாலசட்டம்

ஸாலிஸ்பரி, அக். 8

தென்ரொடீஷியாவில் ஆபிரிக்கர் வாழும் பகுதியில் அவசரகாலச்சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

## பூட்டோ மிரட்டல்

ராவல்பிண்டி, அக். 8

பாரதத்துக்கு வல்லரசுகள் ஆயுதங்கள் அனுப்புவதை நிறுத்தாவிட்டால் மற்ற இடங்களிலிருந்து பாகிஸ்தான் ஆதரவு தேடும் என வெளிநாட்டு மந்திரி பூட்டோ கூறினார்.

## 3 பிரி. விமானங்கள் சுடப்பட்டன

ஜாகர்த்தா, அக். 8

இந்தோனேஷிய போர்னியோவுக்கு மேல் அத்துமீறிப் பறந்த 3 பிரிட்டிஷ் விமானங்களை இந்தோனேஷியர் சுட்டு விழ்த்தியதாய் அறிவிக்கப்பட்டது.

# கெடுதிகளைச் செய்துவிட்டு சிநேக உறவு கொண்டாடுவதா?

### அகற்றினாலே அது சாத்தியம் என சீனாவுக்கு இந்தியா பதில்

புதுடில்லி, அக். 8

எல்லைப் பிரச்னைக்குச் சமாதான தீர்வு காணவேண்டுமானால் கொழும்பு யோசனைகளை நிபந்தனையின்றி சீனா ஏற்க வேண்டுமென இந்தியா சீனாவுக்குத் தெரிவித்திருக்கிறது. இதுசம்பந்தமான இரு குறிப்புகள் டில்லியிலுள்ள சீனத் தூதராலயமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

சீனா அனுப்பிய இரு குறிப்புகளுக்குப் பதிலளிக்குமுகமாகவே இந்தப் பதில் குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

பீகிங்கில் நடைபெறவிருக்கும் விஞ்ஞானக் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு, இந்திய விஞ்ஞானிகளுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு வெளிவேஷம் என்றும் இந்தியக் குறிப்பு கூறுகிறது.

14,500 சதுர மைல்கொண்ட இந்தியப் பிரதேசத்தை சட்டவிரோதமாகப் பிடித்துக் கொண்டும், இதர பல கெடுதிகள் செய்துகொண்டுமிருக்கும் சீனா, இந்தியாவுடன் சிநேகிதமாய் இருக்க விரும்புவதாகக் கூறுவது ஒரு ஏமாற்று முயற்சியென அது மேலும் கூறுகிறது.

அணு சோதனைத் தடை ஒப்பந்தத்தை எதிர்ப்பதுடன், அணுகுண்டு உற்பத்தியிலும் ஈடுபட்டு போர் நோக்கம் கொண்டுள்ள சீனாவின் இன்றைய போக்கில், இந்திய விஞ்ஞானிகள் இப்படிப்பட்ட மகாநாட்டில் எவ்வாறு கலந்து கொள்ளமுடியும் எனவும் இக்குறிப்பில் கேட்கப்பட்டிருக்கிறது.

லடாக்கில் சீனா ராணுவ நடவடிக்கையிலீடுபட்டிருப்பது குறித்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதலில் திருட்டுத்தனமாகவும், பின் பகிரங்கமாக பெரிய படையெடுப்பு மூலமும் சீனா இந்தியப் பிரதேசத்தைப் பிடித்திருக்கிறது. சிக்கிமில் ஊடுருவல் செய்திருக்கிறது. வேறு இடங்களில் நிலத்திலும், வானிலும் ஊடுருவல் செய்திருக்கிறது. இத்தகைய கெடுதிகளை அகற்றாமல் இந்தியாவுடன் அது சிநேகம் கொண்டாட முடியாது" என்றும் இந்தியக் குறிப்பு கூறுகிறது.

# சாஸ்திரியின் உரைக்கு தலைவர்கள் பாராட்டு

### மண்டல சார்பற்ற மகாநாட்டின் நேற்றைய நடவடிக்கை

கெய்ரோ, அக். 8

உலகில் சில பகுதிகளை மட்டும் அணு சூன்யப் பிரதேசமாக்குதல், ஓரளவு ஆயுதப் பரிகரணம் பண்ணுதல் ஆகிய அரைகுறை நடவடிக்கையால் பயனில்லை என்றும், பூரண ஆயுதப் பரிகரணத்திற்கு முயற்சிக்க வேண்டும் என்றும் மண்டலசார்பற்ற உச்சி மகாநாட்டில் நேற்றுப் பேசிய இந்தியப் பிரதம மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்தார்.

உலக நாடுகள் ஐ. நா. வை ஆதரிக்க வேண்டும் எனக் கூறிய சாஸ்திரி, சீனாவை அதில் சேர்ப்பதை இந்தியா எப்போதுமே ஆதரித்து வந்திருக்கிறது எனக் கூறினார்.

பெல்கிரேடில் நடைபெற்ற முதலாவது மண்டல சார்பற்ற மகாநாட்டின் வெற்றிக்கு திரு. நேரு ஆற்றியபணியைசாஸ்திரி புகழ்ந்துரைத்தார். "நேருவின் குரல் இப்போது ஒலிக்காவிடினும் அவரது நினைவு எல்லோரிலும் நிறைந்திருக்கிறது" என்றும் இந்தியப் பிரதமர் கூறினார்.

திரு. சாஸ்திரி தனது உரையை முடித்தவுடன் யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோ, கானா அதிபர் டாக்டர் நிக்ருமோ, இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோ ஆகியோர் அவரைப் பாராட்டினார்கள். டாக்டர் சுகர்னோ டாக்டர் நிக்ருமோ ஆகியோர் சாஸ்திரியுடன் கைகுலுக்கி தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

மகாநாட்டின் எல்லாப் பிரதிநிதிகளும் சாஸ்திரியின் உரைக்குப் பின் நெடுநேரம் கரகோஷம் செய்தனர்.

ஆரம்பத்தில் திரு. நேருவுக்கு மரியாதை தெரிவிக்குமுகமாக மகாநாட்டில் ஒரு நிமிஷம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

அல்ஜீரிய அதிபர் பென்பெல்லா, கானா அதிபர் நிக்மோ, எதியோப்பிய சக்கரவர்த்தி, பர்மிய வெளிநாட்டு மந்திரி ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

உலகப் பிரச்னையைத் தீர்க்கமண்டலசார்பற்ற நாடுகள் முக்கிய பங்காற்ற முடியும் என பர்மியப் பிரதிநிதி கூறினார்.

கானா அதிபர் பேசுகையில் ஆபிரிக்காவில் புதிய குடியேற்ற ஆதிக்கம் இருப்பதாயும், ஆயுதப் புரட்சியைத்தவிர அதை அகற்றுவதற்கு வேறு வழியில்லை என்றும் கூறினார். காங்கோவில் உள்நாட்டுக் குழப்பமும், வெளியார் தலையீடும் இருப்பதாயும், காங்கோ மக்களே தங்கள் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அந்நிய கூலிப்படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

நைஜீரிய வெளி மந்திரி, அதிபர் பென்பெல்லா ஆகியோர் தென்னாபிரிக்க இன ஒதுக்கலை வன்மையாகத் தாக்கிப் பேசினார்கள்.

நேற்று மாலைக் கூட்டம் மாலி ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது.

## காங்கோ

லியப்போல்ட்வில்லி, அக். 8

காங்கோவில் அரசாங்கத் துருப்பு, கலகக்காரரின் மத்திய நிலையம் ஒன்றைக் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது.

## பணிவும் பிரபலமும்

கெய்ரோ, அக். 8

காந்தீயப் பணிவும் எளிமையும் கொண்டுள்ள இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி ஐக்கிய அரபுக் குடியரசின் அதிகாரிகள், மக்கள் ஆகியோரின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டதாக கெய்ரோ செய்திகள் கூறுகின்றன.

பத்திரிகைகளில் சாஸ்திரியின் படத்தையும் கட்டுரைகளையும் பார்த்த எகிப்தியர்கள், ஹோட்டல்களில் கோப்பி அருந்தும்போதும் சாஸ்திரி பற்றி நேசப்பான்மையுடன் குறிப்பிடுகின்றனர். சாஸ்திரி பெயர் கெய்ரோவில் நன்கு பிரபலமாகிவிட்டதால் குழந்தைகளும் அவரை அடையாளம் கண்டுகொள்கின்றனர்.

# வேலையற்றவர் தொகை அதிகரிப்பு

### வேலை பெறுவதில் ஜி. ஸி. ஈ. வாலிபர்கள் கஷ்டம்

கொழும்பு, வியாழன்

வேலையற்றோர் தொகை இப்போது மிகவும் அதிகரித்துள்ளதாகவும் சென்ற ஜூலை மாதம் 31-ம் திகதியில் தொழிற் கந்தோர்கள் மூலமாக வேலை தேடுவோரின் தொகை 160541 ஆக உயர்ந்தது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 1939ம் வருடத்தில் வேலையற்றோர் பதிவு ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இப்போது தான் மிக உயர்ந்த தொகையானவர்கள் இவ்விதம் வேலையற்றவர்கள் வரிசையில் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தொழிற் கந்தோர்களில், வேலைதேடி பதிவு செய்தோர் தொகை ஜூலை மாதத்தில் கொழும்பில் தான் அதிகமாக இருந்துள்ளது. இங்கு 58,129 பேர் பதிவு செய்துள்ளனர். அடுத்து காலி, சமூத்துறை ஆகிய இடங்கள் இடம் பெறுகின்றன. அநுராதபுரத்தில் வேலையற்றோர் தொகை விகிதம் மிகவும் வேகமாக அதிகரித்து வருவதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியால் சமீபத்தில் எடுக்கப்பட்ட மதிப்பீட்டின்படி 19 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்டவர்களே, வேலையற்றிருப்போர் தொகையில் பெரும் பகுதியினராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி. சி. ஈ. சித்தியெய்திய வாலிபர்கள் வேலை பெறுவதில் மிகவும் சிரமப்படுவதாகவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## அடுத்த ஐ. நா. கூட்டம்

### குருஷ்சேவ் நேரடியாக பங்குபற்றுவார்

நியூயோர்க், அக். 8

ஐ. நா. பொதுச் சபையின் அடுத்த கூட்டத்தில் சோவியத் பிரமர் குருஷ்சேவ் கலந்து கொள்ள வேண்டுமென யுதாண்ட் விடுத்த அழைப்பை சோவியத் பிரதமர் ஏற்றிருக்கிறார். அடுத்த கூட்டம் சபையின் 20-வது கூட்டமாய் இருப்பதால் எல்லா உலகத் தலைவர்களும் நேரடியாகத்தங்களது கோஷ்டிக்குத் தலைமை வகித்துச் செல்வதின் மூலம், ஐ. நா. வை ஒரு உச்சிமகாநாடாகச் சிறப்பிக்கவேண்டும் என்றும் குருஷ்சேவ் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

நவம்பர் 3-ம் திகதி தேர்தலில் தாம் வெற்றிபெற்றால் ஐ. நா. கூட்டத்தில் கலந்து கொள்ளத்தயாராய் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவித்திருக்கிறார்.

## 5-வது எஃகு ஆலை

புதுடில்லி, அக். 8

இந்தியாவில் 5-வது எஃகு ஆலை ஏற்படுத்துவது சம்பந்தமாக அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் வெற்றிகரமாகப் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாய் அறிவிக்கப்பட்டது.

## சட்டவிரோத குடியேற்றத் தடுப்பு

கௌகாட்டி, அக். 8

அஸ்ஸாம்-திரிபுராவில் சட்டவிரோதமாக பாகிஸ்தானியர் குடியேறுவதைத் தடுக்கும் பொருட்டு தேசிய ரிஜிஸ்டர் தயாரிக்கப்பட்டு வருகிறதென்றும், 4 விசாரணை மன்றங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்றும் மேலும் விசாரணை மன்றங்கள் ஏற்படுத்தப்படவிருப்பதாயும், எல்லை முழுதும் அரை மைல் தூரத்திற்கு ஜனசூன்ய பிரதேசமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அறிவிக்கப்பட்டது.

# உள்ளூராட்சி மன்றங்கள் மீது மாற்றாந்தாய் மனப்பான்மை

## அரசாங்கத்தின் மீது உடுவில் எம். பி. குற்றச்சாட்டு

மாவிட்டபுரம், வியாழன்

"இந்நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்டுள்ளது என்று இந்த அரசாங்கத்தின் மீது குற்றஞ் சாட்டுகிறேன்" என்று மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. சிவகுருவின் சேவை நலத்தைப் பாராட்டி ஏழாலை மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

இவ் விழா ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலையில் திரு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

திரு. தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்றைய அரசாங்கம் காலஞ்சென்ற பண்டாரநாயக்காவினதும் உள்ளூர் ஆட்சிக் கொள்கையைப் பொறுத்தமட்டில், நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தக்கூடிய வகையில் உள்ளூர் ஆட்சிமன்றங்கள் பயன்படுத்தப்படவில்லை யென்பதுதான் எனது குறைபாடு.

உள்ளூராட்சிமன்றங்களின் இன்றைய அமைப்பின்படி அவை தங்களுடைய சேவைகளைப் பெருப்பிக்க அதிகாரமோ நிதியோ கிடையாது.

இந்நிலையைத் திருத்தி மத்திய அரசாங்கம் ஸ்தலஸ்தாபனங்களின் அதிகாரத்தை விரிவுபடுத்தி அவற்றை குடிசைக் கைத்தொழில் போன்றவற்றில் இறங்க ஊக்கப்படுத்த வேண்டும் அரசாங்கத்தின் 10 ஆண்டுத் திட்டத்தின் கீழ் குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி போன்ற திட்டங்களை வெற்றிகரமாக நடத்த ஸ்தல ஸ்தாபனங்கள் சிறந்த கருவிகள்.

ஆசிரியர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் ஸ்தல ஸ்தாபனங்கள் பூரணமாகத் யாகத் தாய்மொழியில் நடைபெறவேண்டுமென்றும் ஸ்தல ஸ்தாபனங்களை மக்களுக்குப் பயனுள்ளதாக மாற்றவேண்டியது அவசியமென்றும் கச்சேரி முறைக்குப் பதிலாக பிரதேச சபைகள் அமைக்கப்படவேண்டுமென்றும் கூறினர்.

திருவாளர்கள் நாகலிங்கம், செல்லையா உட்பட மற்றும் பலர் பேசினர்கள். திரு. சிவகுரு தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிகூறினர்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Reg Park in
HERCULES IN THE
CENTRE OF THE EARTH
(Techniscope - Color)



மங்களகரமான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

குயின்லன் (நுவரெலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (கொழும்பு)

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்


## 'பெனிசிலின் ஒயின்மென்ட் உபயோகிக்காதீர்'

கொழும்பு, வியாழன்

பெனிசிலின் ஒயின்மென்டை உபயோகிக்க வேண்டாமென மருந்து சிபார்சுசெய்யும் கமிட்டி எச்சரிக்கைசெய்துள்ளது.

இந்த மருந்து மிகக்கெடுதல் விளைவிக்கக் கூடியதென்று மேற்படி கமிட்டி தெரிவித்துள்ளது.

## காந்திக்குச் செய்யும் சேவை

கச்சாய், வியாழன்

"உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களையே தினசரி வாழ்வில் உபயோகிப்பதும், கட்டுப் பயத்துடன் அறவாழ்வு வாழ்வதும் கூடியளவு தாமே வேண்டிய பொருட்களை உற்பத்தி பண்ணி அவற்றை உபயோகிப்பதும் காந்தியடிகளுக்குச் செய்யும்மகத்தான சேவையாகும். கூட்டுப் பிரார்த்தனையின் நன்மையை உலகுக்கு உணர்த்தியவரும் காந்தி மகானேயாகும்" இவ்வாறு சென்ற வெள்ளிக்கிழமை மீசாலை கிழக்கு சித்திரவேலாயுத சுவாமி கோயில் மண்டபத்தில் நடத்தப்பட்ட காந்தி ஜெயந்தி விழாவில் பேசுகையில் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினர்.

கோயில் தருமகர்த்தா திரு. க. கந்தையா தலைமை வகித்தார்.

திரு. கே. முதலித்தம்பி, கு. வி. மகாலிங்கம், திரு. க. யோகலிங்கம், திரு. ஆ. யோகநாதன் உட்படப் பலர் பேசினர். ஆசிரியை ஸ்ரீமதி கமலம் மகாலிங்கம் சிறந்த இன்னிசை விருந்தளித்தார்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

**வெள்ளி 9-10-64**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம். 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 சமய பாடல்கள். 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தநின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி 7-15 பாட்டு-ஆர். மனோன்மணி, 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 பாட்டு-பொன்மணி குலசிங்கம், 10-00 நேயர் விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை 6-55 அருள் வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 காந்தி அஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 அபிராமி அந்தாதிப் பாடல்கள்.

மாலை 5-15 நாதஸ்வரம்—ஏ. சிட்டிலிங்கம்பிள்ளை, 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 பொங்கியெழும் பாரதம் சித்திரம், 7-45 வீணை—வாசா கிருஷ்ணமூர்த்தி, 9-15 இசை மாலை, 9-30 மெல்லிசை, 9-45 பலகணி, 10-00 திரைப்பட இசை.

## 'பத்திரிகை மசோதா தேசவிரோதமானது'

கண்டி, வியாழன்

"பத்திரிகை மசோதாவைத் தொடர்ந்து, ரஷ்யா, சீனா ஆகிய தேசங்களிலிருந்துவரும் அரசாங்கமுறையைவிட இலங்கையில் மோசமானமுறையிலமைந்த அரசாங்கம் தலைதூக்கும்" என கண்டி ஆயுள்வேத வைத்தியர்கள்சங்கத் தலைவர் திரு டி. எம். ஜெயசிங்கா, புஷ்பதான மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

பத்திரிகைமசோதாவும் மரவரிமுறையும் பௌத்த மத வாழ்க்கைக்கு கெடுதல் விளைவிப்பன என்றும் பத்திரிகை மசோதா ராய்டர் செய்தி ஸ்தாபனத்துடன் இலங்கை பத்திரிகைகள் கொண்டிருக்கும் தொடர்பைத் துண்டித்து விடும் என்றும் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார். இவ்வித மசோதா பத்திரிகைகளை அரசாங்கத்தின் பிரசாரத்துக்கான கருவியாக மாற்றிவிடும் எனவும் அவர் எடுத்துக்கூறினர்.

## சரஸ்வதி பூசை

யாழ்ப்பாணம், வியா.

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி நவராத்திரி-சரஸ்வதி பூசைக் கலைவிழா எதிர்வரும் 12-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 8 நாட்கள் வரை நடைபெறவிருக்கிறது.

### நிகழ்ச்சி விபரம்

திங்கட்கிழமை— பூசைஆராதனை - பஜனை; - குமாரி ராதா குழுவினர்; இணை இசை-குமாரி நா. இந்திராதேவி, குமாரி ந. பிராணேஸ்வரி; சங்கீத கதாப் பிரசங்கம் 'மகிடாசுரவதம்' - செல்வி ராதா சோமசுந்தரம்.

செவ்வாய்க்கிழமை— பூசை ஆராதனை - பஜனை; குமாரிரஞ்ஜினி குழுவினர்; இன்னிசை; குமாரி ஜெயலக்ஷமி சதாசிவம்.

புதன்கிழமை — பூசை ஆராதனை - பஜனை குமாரி ஜெயலீலா குழுவினர்; இரு குரலிசை குமாரி சி. பரமேஸ்வரி, குமாரி சி. பூபதி; சங்கீதக் கதாப்பிரசங்கம் சீ. விஜுசித்தம்பி.

மேற்படி விழாவை சிதம்பராக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

○

### மயிலிட்டியில்

மயிலிட்டி தெற்கு வீரபத்திரர் ஆலயத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை தொடக்கம் நவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது. தொடர்ந்து 15-ம் திகதிவரை இந்துசமயவிருத்திச்சங்க ஆதரவில் விசேட கூட்டுப் பிரார்த்தனையும், பண்டிதர் இ. நமசிவாயத்தின் தலைமையில் நவராத்திரி பற்றிய சமயப் பிரசங்கங்களும் விழாவில் இடம்பெறும்.

## அன்னை கிருஷ்ணபாய் ஜெயந்தி விழா

சாவகச்சேரி, வியாழன்

'உலகில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற எண்ணம் கொண்டு சற்குரு சரணடைந்து வாழ்ந்தவர் அன்னை கிருஷ்ணபாய். நம் வாழ்க்கை மறுமலர்ச்சியடைய சுயநலம், ஆசை, கோபம், கடுஞ்சொல் நீக்கி, எதிரியையும் நேசித்து வாழவேண்டும்.'

இவ்வாறு உருத்திரபுரம் மகாதேவ ஆச்சிரமத் தலைவர் ஸ்ரீமத் வடிவேல் சுவாமி, முகமாலை ஆனந்தா ஆச்சிரமத்தில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற அன்னை கிருஷ்ணபாயின் அறுபத்தோராவது ஜெயந்தி விழாவில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

மேற்படி ஜெயந்தி விழாவை முன்னிட்டு காலை 10 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை அபிஷேகம், பிரார்த்தனை, மகேசுரபூசை, கூட்டுப்பிரார்த்தனை, பக்திப்பாடல், குருபூசை ஆகியன இடம்பெற்றன.


மிகச்சிறப்பான முறையில் தயாராகிக்கொண்டிருக்கின்றன!

1965-ம் ஆண்டுக்குரிய

ஆனந்தா திருக்குறள் கலண்டர்கள்!

யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ இரகுநாதையர் அவர்களது வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகளுடனும், மற்றும் வழக்கமான எல்லா அம்சங்களுடனும் மிகச் சிறப்பான முறையில் ஆனந்தா திருக்குறட் கலண்டர்கள் தயாராகின்றன.

மற்றும் வர்த்தகர்கள் விலாச விளம்பரங்கள் அச்சிட்டு அன்பளிப்புச் செய்வதற்கேற்ற

★ ஆனந்தா அறிவுரைக் கலண்டர் (No. 2) ★ ஆனந்தா மூன்று தேதிக் கலண்டர் (No. 3)
★ ஆனந்தா வாரக் கலண்டர் (No. 4) ★ ரேல் கலண்டர்
★ ஆனந்தா நாட்குறிப்பு (பெரிய அளவு 2 நாள் 1 பக்கம்)முதலியனவும் தயாராகின்றன.

கலண்டர் உலகில் ஆனந்தா திருக்குறட் கலண்டர்கள் பல வருடங்களாக நன்கு மதிக்கப்படுபவை.
நேர்த்தியான தயாரிப்புகள். ஆனல் விலைகள் மிகக் குறைவு. உங்கள் தேவைகளுக்கு இன்றே விசாரியுங்கள்.

தொலைபேசி: 348
தந்தி: அச்சகம்.

ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# "ஒரு கரண்டி பாலின் சுவையை எந்தப் பையனும் விரும்புவான்"






இனிப்பூட்டப்பட்ட மில்க்மெய்ட் கட்டிப் பால் தடவிய பாணையே உலகடங்கிலு முள்ள சிறுர்கள் விரும்பி உண்கிறுர்கள். அவர்கள் அதை விரும்புவதன்றி அதன் மேல் அலாதி பிரீதி கொண்டுள்ளார்கள்! அது அவர்களுக்கும் மிகவும் நல்லது— உடலுறுதிக்கு சீனியும், பசுப்பாலிலுள்ள திறம் சத்துக்களும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. ஞாபகமிருக்கட்டும், மில்க் மெய்ட் பாலில்தான் விசேட விட்டமின்கள் சேர்க்கப்பட்டுள்ளன.......................... சுத்தமான, புதிய பசுப் பாலில் தயாரிக்கப்பட்டது. நெஸில்ஸ் இதை உத்தரவாதமளிக்கிறது.

# மில்க் மெயிட்

## இனிப்பூட்டப்பட்ட கட்டிப்

# பால்

தரத்துக்கு உத்தரவாதமளிக்கும் நெஸில்ஸ் உற்பத்தி


## தந்தை படுகொலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடராசா என்பவர் அடிக்கடி தங்கள் வீட்டிற்கு வருவதாகவும், தனது தகப்பனுக்கு, தன்னை நடராசாவிற் விவாகம் செய்து கொடுக்க விருப்பமில்லையென்றும், சம்பவம் நடந்ததினம் தன்னை காரில் காட்டிற்கு கடத்திச் சென்றுபின் வீட்டிற்கு கொண்டுவந்து நடராசா என்பவர் தலையைக் கெடுத்ததாகவும், நடராசா, அவரது சகோதரர் குணம், அவரது மச்சான், தனுஷ்கோடி ஆகிய நால்வரையும் தனக்கு தெரியுமென்றும் மற்ற மூன்று பேரையும் தனக்குத் தெரியாதென்றும், பூரணம் மேலும் வாக்குமூலத்தில் தெரிவித்தார் என்றும் அறியப்படுகிறது.

சந்தேக நபர்களை பொலிஸார் தேடிவருவதாகவும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லையென்றும் அறியப்படுகிறது.

---

## ஓட்டிசுட்டான்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்யமளித்தபோது காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் சடலத்தை தான் பிரேதபரிசோதனை செய்தாரென்றும் சடலத்தை சிவஞானசுந்தரமும், சின்னப்பிள்ளையும் அடையாளம் கண்டு கொண்டார்களென்றும் அவரது இடதுபக்க மார்பில் காயமிருந்ததாகவும் கூறினர்.

### தபால் சேவகர் சாட்சியம்

ஆசைப்பிள்ளை சண்முகம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் ஒட்டிசுட்டான் தபாற்கந்தோரில் தபாற் சேவுகக் கடமையாற்றி வந்தேன். காலஞ்சென்றவர் ஓர் இளைப்பாறிய தபாற்கந்தோர் அதிகாரி. நான் கடமையாற்றிய தபாற்கந்தோரில் காலஞ்சென்றவரின் மருமகன் உதவி தாபற்கந்தோர் அதிகாரியாக கடமையாற்றினர்.

### எதிரி வேலை நீக்கம்

எதிரியாகிய சந்திரசேகரமும், தபாற்சேவகராகக் கடமையாற்றி, சம்பவம் நடைபெற்ற தினத்திற்கு ஏழு எட்டு மாதத்திற்கு முன் வேலைநீக்கம் செய்யபபட்டார்.

அன்றையதினம் நான்கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். பகல் 12 மணிக்கு எனக்கு வேலைமுடிவடைந்தது அதன் பின்மாலைவரை நான் கந்தோருக்குச் செல்லவில்லை. சம்பவம் நடந்ததினம் பிற்பகல் 2 மணிக்கு நான் கடைக்குச் சென்றேன். அப்போது காலஞ் சென்றவர் ரோட்டில் சென்று கொண்டிருந்தார். அப்போது சந்திரசேகரம் என்பவர் ஒரு மரத்தின் பின்னுல் நின்று, காலஞ் சென்றவருக்கு முன்னுல் வந்து அவரைக் கத்தியால் குத்தினர்.

### போஸ்ட் மாஸ்டரை குத்திப்போட்டான்

நான் உடனே "ஐயோ சந்திரசேகரம் போஸட்மாஸ்டரைக் குத்திப் போட்டான்" என்றுகத்தினேன். அப்போது மகாலிங்கம அவ்விடத்திற்கு வந்தார். காலஞ் சென்றவர் காயத்தைக் கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டு எதிரியிடம் இருந்து கத்தியைப் பறிக்க முயன்ருர். காலஞ் சென்றவர் மகாலிங்கத்திடம் "சந்திரசேகரம் கத்தியால் குத்திப் போட்டான். கத்தியைப் பறியடா" என்ருர்.

### எதிரியிடம் கத்தியைப் பறித்தார்

மகாலிங்கம் ஓடி வந்து எதிரியைப் பின் பக்கத்தால் கட்டிப் பிடித்துக் கொண்டு கத்தியைப் பறித்தார். எதிரி மூல்லைத்தீவு ரோட்டுப் பக்கமாக ஓடிந்து போனுர். காயத்திற்கு கட்டுப் போட்டபின் நான் நின்றுகொண்டிருந்தேன். சிவஞானசுந்தரம் என்பவர் எதிரியைப் பிடித்துக் கொண்டு வந்தார். எதிரி தப்பி விடுவாரென எண்ணி, நானும் ஓடிச் சென்று எதிரியைக் கையில் பிடித்து இழுத்து வந்தேன்.

**நீதி:** நீர் சொல்வது உண்மையாக இருந்தால், சிவஞானசுந்தரம் வரும்போது எதிரி சரியான தூரம் போயிருப்பாரே? - நான் பார்த்தபோது எதிரி போய்க்கொண்டிருந்தார்.

**நீதி:** நீர் எதிரியைப் பிடிக்க எத்தனிக்கவில்லையா? - நான் காயக்காரருடன் உதவியாக இருந்தேன்.

### எதிரிக்கு மாருக பெட்டிசம்

**நீதி:** கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லும். தபால் கந்தோர் அதிகாரிக்கு எதிரிக்கு விரோதமாகப் பெட்டிசம் எழுதியிருக்கிறீரா? - இல்லை.

**நீதி:** உமக்கும் எதிரிக்கும் கோபமில்லையா? இல்லை.

**நீதி:** சிநேகிதமாக இருந்தீர்கள்? ஆம்.

**நீதி:** எதிரியைப் பிடித்த பின் என்ன செய்தீர்கள்? - ஒன்றும் செய்யவில்லை, இறந்தவருக்கு பக்கத்தில் எதிரியை இருத்தினேம்.

(6-ம் பக்கம் பார்க்க)

---

### அரசாங்க அறிவித்தல்
### கண்டி கச்சேரி

என். 1955- கிட்டத்தட்ட 39 பழைய துவக்குகள் இந்தக் கச்சேரியில் 1964-10-15-ம் திகதி முற்பகல் பத்து மணியளவில் ஏலத்தில் விற்கப்படும். இந்த விற்பனையில், துவக்குகள் பெறுவதற்குரிய பத்திரங்கள் பெற்றவர்கள் தான் பங்குபெறலாம். ஏலத்தில் துவக்குகள் வாங்குபவர்கள் பணம் உடனே கட்டவேண்டும்.

---

### வாடகைக்கு அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம், காங்கேசன் துறை வீதி, 222ம் இலக்கக் கடையில் கந்தையா பரமு அவர்களிடம் 1-6-61 தொடக்கம் 6-7-62 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாத வைகளை 23-10-64 வெள்ளிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனையாளர்,
648, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம், 924

---

## அறிவித்தல்

கடந்த மாதம் 18-9-64-ல் திரு. க. கயிலாயநாதர் எழுதியிருந்த கட்டுரையில் திரு. க. வயிரவநாதர் அவர்கள் தான் பத்திரகாளி அம்மன் கோவிலில் நடந்துவந்த மிருகபலியை நிறுத்தினர் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனல் உண்மையின்படி கோவில் முகாமையாளர் ஆகிய திரு. சி. இராசநாயகம் (பூசகர்), சி. தம்பிராசா, கா. ஆறுமுகம் ஆகிய நாங்கள் தான் நிறுத்தினேம் என்பதின் உண்மை 18-9-44-ம் ஆண்டு வெளிவந்த "இந்துசாதனம்" (பத்திரிகை) மூலம் மக்களுக்கு தெரியப்படுத்தினேம்.

இங்ஙனம்,
சி. இராசநாயகம்,
க. ஆறுமுகம்.

937

---

## வரி விளம்பரம்

### காணவில்லை

எனது "கார்லை சன்ஸ்" காணமல் போய்விட்டது கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். மு. கந்தசாமி, புத்தூர் ரோட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 1016

---

### சைக்கிள்கள் விற்பனைக்குண்டு

எனது சொந்த உபயோகத்திலுள்ள ஏழு சயிக்கிள்கள் விற்பனைக்குண்டு. க. தம்பிராசா, 180, ஆடியபாத வீதி, கல்லூர் மார்க்கெட், 1015

# தந்தை படுகொலை; மகள் கெடுக்கப்பட்டார்

## கிளிநொச்சியில் கோரசம்பவம்; சந்தேக நபர்கள் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சி இராமநாதபுரம் காலனியில் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்த ஒரு கோர சம்பவத்தில், 50 வயதுடைய தகப்பனுர் கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு, அவரது 17 வயது மகள், ஏழு நபர்களால் கடத்திச்செல்லப்பட்டு, ஒருவரால் கெடுக்கப்பட்டார் எனத்தெரிய வருகிறது.

இராமநாதபுரம் காலனியில் வாழ்ந்து வந்த ஆறுமுகத்தை (வயது 50) கொலைசெய்துவிட்டு அவரது மகள் பூரணத்தை நடராசா என்பவரும், அவரது சகோதரனுணும், மச்சான் தனுஷ்கோடி, மற்றும்மூவரும் சேர்ந்து காரில் கடத்திச் சென்றதாகவும், பூரணத்தை காரிலே காட்டிற்கு கடத்திச் சென்று பின் வீட்டிற்குக்கொண்டுவந்துநடராசா என்பவர் அவரைக் கெடுத்ததாகவும், மறுநாட்காலை பூரணம் வட்டக்கச்சி கிராமசேவகருக்கு இதுபற்றி அறிவித்ததாகவும், கிராமசேவகர் பொலிசாருக்கு அறிவித்ததாகவும் மேலும் தெரிய வருகிறது.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரூபார்ட் சில்வா, சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி, யாழ்ப்பாணம் ஏ. எஸ். பி. மரியநாயகம், கிளிநொச்சி சப். இன்ஸ்பெக்டர் தேவசகாயம் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்கு நேற்று முன்தினம் சென்று விசாரணை நடத்தினர்கள். சாவகச்சேரி வைத்திய அதிகாரி கொலையுண்டவரின் மகள் பூரணத்தை பரிசோதனை செய்தார்.

இரவு 9 மணிக்கு சம்பவம் நடந்த தினம் தானும் தகப்பனும் வீட்டிலிருந்த சமயம், 7 பேர் வந்து தன்னை தூக்கிச் சென்றதாகவும், அப்பொழுது தனக்கு உதவியளிக்க வந்த தகப்பனுர் கத்தியால் குத்தப்பட்டாரென்றும், அந்த ஏழு பேரில் நால்வரைத் தனக்கு தெரியுமென்றும், பூரணம் வாக்குமூலத்தில் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஒட்டிசுட்டான்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதி: எதிரிக்கு காயம் இருந்ததா? – ஆம். என்னகாயம்? – இரத்தம் இருந்தது.

நீதி: எதிரியைக் கட்டினீர்களா? – இல்லை.

### குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: எதிரிக்குஎதிராகநீரும், உமக்கு எதிராக எதிரியும் முறைப்பாடு செய்தீர்களா? – கிளாசர் விஷயங்களைப் பற்றி முறைப்பாடு செய்தோம்.

வழ: சிவஞானசுந்தரம் தான் அடித்ததென்று கூறினீரா? – ஆம்.

நீதி: சிவஞானசுந்தரத்தின் கையில் தடியிருந்ததா? – இல்லை.

நீதி: சிவஞானசுந்தரம் நல்லாய் ஓடுவாரா? – ஆம்.

நீதி: எப்படித் தெரியும்? ஓட்டப் பந்தயத்தில் பங்குபற்றியிருக்கிறாரா? – எனது காம்பன் மாடு அறுத்துக்கொண்டு அரைக்கட்டை ஓடியபோது அவர் துரத்திக்கொண்டுபோய் பிடித்து வந்தார். அதிலிருந்து அவர் ஓடக்கூடியவர் என்று தெரியும் (பலத்த சிரிப்பு)

நீதி: சிவஞானசுந்தரம் எதிரியை ஓடிப்பிடித்தார் என்று பொலிஸுக்கு சொன்னீரா? – ஆம்.

நீதி: மாவட்ட நீதிபதி சிவஞானசுந்தரம் தான் நல்லாய் ஓடக்கூடியவர் என்று எங்களுக்குத் தெரியும் நீர் இரண்டாவது சிவஞானசுந்தரத்தை ஓட்டக்காரரென்று சொல்கிறீர்.

இக்கிலையில் எதிரிதரப்பு வழக்கறிஞர் எழுந்து, எதிரிக்கு ஏற்பட்ட சுடுபான சோபத்தினுல் இக்குற்றத்தைச் செய்தார் என நீதிபரிசாரிடம் தெரிவித்தார்.

## உடன் விசாரணை செய்க

உடுப்பிட்டி வியாழன்

யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தின் நிர்வாகச் சீர்கேடு களை பற்றி வித்தியாதிபதிக்கு மீண்டும் இலங்கைப் பண்டிதர் சங்கம் புகார் செய்துள்ளது. உடனடியான விசாரணை நடத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளது என இலங்கைப் பண்டிதர் சங்க பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

## கலாமன்ற கதம்ப விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் ரசிக கலா மன்றக் கதம்ப விழா திரு. எம். பாலசுந்தரம் எம். பி. தலைமையில் நடைபெற்றது. பிரதான பேச்சாளராக கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலைப் பேராசிரியை செல்வி சந்தனங்கை கந்தப்பு 'மன்ற வளர்ச்சி' என்ற தலைப்பில் பேசினர். அதையடுத்து மன்ற மாணவ மாணவிகளின் இசைக் கச்சேரி நடைபெற்றது. அடுத்து மன்றத் தலைவர் செல்வன் எஸ். கணபதிப்பிள்ளையின் இன்னிசைக் கச்சேரி இடம் பெற்றது. பின்னர் பல நாடகங்களும் இடம் பெற்றன.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6-45 மணிமுதல் 8 மணி வரை நல்லூர் தேவஸ்தான சண்முகதீர்த்த மண்டபத்தில் அகில இலங்கைப் பொது ஜனசேவைச் சங்க சமயப் பிரசார சபையினரால் ஸ்ரீமத் மணிபாகவதர் குலைமையில் ஆசிரியை ஸ்ரீமதி வசந்தமலர் நாகநாதன் "நவராத்திரியின் மகிமை" என்னும் பொருள் பற்றியும் வணனை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் ஆசிரியர் திரு. க. முருகேசு "அவனருள்" என்னும் பொருள் பற்றி மாலை 6 மணிமுதல் 7 மணிவரையும் நல்லூர் கிழக்கு விநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இ. சிவகுப்பிரமணியம் மாலை 7 மணி முதல் 8 மணிவரை "கம்பர் இராமாயணம்" என்னும் பொருள் பற்றியும் பிரசங்கங்கள் நிகழ்த்துவார்.

## ஆண்டு விழா

உடுப்பிட்டி, வியாழன்

இலங்கை மக்கள் முன்னேற்றக் கழகம் தனது ஆண்டு விழாவை எதிர்வரும் தீபாவளி தினத்தில் கொண்டாடவிருக்கிறது. இவ்விழா பெரிய தோர் கலை விழாவாக அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது. கவியரங்கு, கருத்தரங்கு முதலியனவும் இடம் பெறவிருப்பதாக செயலாளர் தெரிவித்தார்.

## வேலை வாய்ப்பு பற்றிய கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"வேலை வாய்ப்புகளும் அவற்றை எவ்வாறு பெருக்கலாம்" என்ற தலைப்பில் 10-ம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், 17-ம் திகதி தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியிலும், 24-ம் திகதி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலும் கருத்தரங்குகள் நடைபெறும். இக் கருத்தரங்குகள் யாழ்ப்பாண இளைஞர் சபை சமூக பொருளாதார நல உரிமை சங்கத்தின் ஆதரவில் நடைபெறும்.

ஆசிரியர்களும், பாடசாலைப் படிப்பை முடித்து உத்தியோகத்தை எதிர் பார்த்து இருக்கும் இளைஞர்களும் சமூக சேவையில் ஈடுபாடு கொண்டுள்ள இளைஞர்களும், பிரமுகர்களும் இக்கருத்தரங்குகளில் பங்கு பற்றலாம். அநேகமான நிகழ்ச்சிகள் யாவும் தமிழில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகரின் தீர்ப்பை கேட்ட எதிர்கட்சியினர் சபாநாயகரை பாராட்டி கரகோஷம் செய்தும், ஆரவாரித்தும் மகிழ்ச்சி தெரிவித்தனர். கலாநிதி என். எம். பெரேரா "இலங்கை சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சபாநாயகர்" என கரகோஷத்துக்கிடையே கூறினர்.

### சபாநாயகரின் தீர்ப்பு

"நேற்றைய விவாதத்தில் பலர் பல ஒழுங்குப் பிரச்னைகளை எடுத்துக் கூறினர். அவற்றையெல்லாம் ஆராய்ந்தேன். இந்தச் சூழ்நிலையில் நேற்றுக் கொண்டுவரப்பட்ட ஒழுங்குப் பிரேரணை ஒழுங்கற்றது எனவே அதை நான் நிராகரிக்கிறேன்.

சபை முதல்வர் கொண்டு வந்த இந்தப் பிரேரணையானது முன்னர் எப்பொழுதும் கொண்டுவரப்படவில்லை. 6-10-64-லில் நடைபெற்ற சகல நிகழ்ச்சிகளையும் செல்லுபடியற்றவையாக்குமாறு இப்பிரேரணை கோருகிறது.

6 அம்சங்களை அடைவதற்காக இந்த பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளதென்பதை கௌரவ அங்கத்தவர்கள் அறிவார்கள். செனட்டில் வாசிக்கப்பட்ட பிறகு மசோதா இங்கு சமர்ப்பிக்கப்பட்டது சம்பந்தமான சகல நிகழ்ச்சிகளும் 77-வது சட்ட விதிகளுக்கமைய செல்லுபடியற்றதாக்கப்படவேண்டும் என இதன் முதல் பகுதி கோருகிறது.

இது சம்பந்தமாக தீவிரமாக ஆழ்ந்து யோசித்த பின் நான் கூறுவது என்னவெனில் நான் முன்னர் வழங்கிய தீர்ப்பு தவிர்க்கமுடியாது அது சபை சட்டத்துக்கு அமையவே கூறப்பட்டது. நான் முன்னர் வழங்கிய தீர்ப்பு பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தை இந்த புதிய பிரேரணை தோற்றுவித்துள்ளது. எனவே இது 81-வது சட்ட விதிக்கு புறம்பானதாகிறது"

### அரசாங்கக் கட்சி கூடியது

சபாநாயகரின் தீர்ப்பைத் தொடர்ந்து அரசாங்க கட்சி அவசரமாக கூடியபொழுது ஏரிக்கரைப் பத்திரிகைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதென முடிவு செய்யப்பட்டது. பின்னர் நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டம் அரசாங்கக் கட்சிக் கூட்டத்தின் முடிவை ஏற்றுக்கொண்டது. மந்திரி சபையின் கூட்டம் இரவு சுமார் 10-30 மணி வரை நடைபெற்றது.

மசோதாவை இம்மாதம் 13-ந் திகதி சபையில் கொண்டு வந்து அன்றைய தினமே விவாதித்து முடிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

# வெரகரவேலைநிறுத்தம் பரவும்

## யூனியன்கள் எச்சரிக்கை

கொழும்பு, வியாழன்

வெரஹெர இலங்கை போக்குவரத்துச்சபை டிப்போவில் மூவாயிரம் தொழிலாளரின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. வேலைநிறுத்தம் முடிவடைவதற்கான அறிகுறியெதுவும் தென்படவில்லை.

வேலைநிறுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படாவிட்டால் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள இதர டிப்போக்களிலும் வேலைநிறுத்தம் பரவும் என்று வேலைநிறுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள யூனியன்கள் அறிவித்துள்ளன.

வெரஹெர டிப்போவின் கதவுகள் நேற்று மூடப்பட்டன. தொழிலாளருக்கான பிரயாணச் சலுகைகள் வாபஸ்பெறப்பட்டுள்ளன. ஆயுதந் தாங்கிய பொலிசார் டிப்போவில் காவல்புரிகின்றனர்.

## பள்ளத்தில் பாய்ந்த பஸ்!

### அதிக சேதமேற்படவில்லை என அறிவிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

திருக்கோணமலையிலிருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் புறப்பட்ட "எக்ஸ்பிரஸ்" பஸ்வண்டி, லொறி ஒன்றிற்கு வழிகொடுக்கும் பொழுது பனிச்சங்குளை பள்ளத்தில் தடம் புரண்டது. பஸ்தடம் புரண்டதும் பஸ்ஸில் இருந்த பிரயாணிகள் திகில் அடைந்து உரத்த சத்தம் இட்டனர். தெய்வாதீனமாக ஒருவருக்கும் கடுமையான சேதம் ஏற்படவில்லை. சிறு காயங்களுக்குள்ளான 25 பிரயாணிகள் அநுராதபுர ஆஸ்பத்திரியிலும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெறுகின்றனர் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

பஸ் சாரதியும் கண்டக்டரும் ஒருவித காயமுமின்றி தப்பினர் பஸ்வண்டி புரண்ட இடத்திலிருந்து அப்புறப்படுத்தவில்லையென்றும், பொலிஸ் காவல் புரிந்து வருகின்றதென்றும் தெரியவருகிறது.

## ஊசி ஏற்றியதும் மரணமானர்

யாழ்ப்பாணம், வியாழன்

புலோலி தெற்கைச் சேர்ந்த சின்னப்பு (43 வயது) என்பவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் ஊசிமருந்து செலுத்தப்பட்ட சமயம் திடீரென்று மயக்கமடைந்து மரணத்துக்குள்ளானர்.

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தியசமயம் மேற்படி இவர் காசநோயினால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அங்கு பரீசார்த்தமாக ஊசி ஏற்றப்பட்ட போது மயக்கமடைந்து அவர் மரணத்துக்குள்ளானரென்றும் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

இயற்கை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# அரசாங்க காரியாலயங்களில் கார்த்திகை தீபாலங்காரம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க இந்துமத ஊழியர்கள் முதல் தடவையாக இம்முறை சரஸ்வதி பூஜையை கொண்டாடத் தீர்மானித்தது போல் கார்த்திகை தீப அலங்காரத்தையும் அரசாங்க காரியாலயங்களில் கொண்டாட வேண்டும் என்ற தீர்மானம் இந்து வாலிபர் சிரேஷ்டசபைக் கூட்டத்தில் இந்தவார இறுதியில் கொண்டுவரப்பட இருக்கின்றது.

இந்த தீர்மானத்தை கடைமுறைக்கு கொண்டு வருவதற்காக கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் பிரசாரக சங்கங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது.

## ஜனவரி முதல் 5 நாள் வேலை

கொழும்பு, வியாழன்

அரசாங்க ஊழியருக்கு வாரத்தில் ஐந்து நாள் வேலை செய்யும் திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து அமுலுக்கு வருமென நிதி அமைச்சக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## காங்கோ பிரதமர்

கெய்ரோ, அக். 8

காங்கோவிலுள்ள ஐக்கிய அரபுக் குடியரசு தூதராலயத்திலிருந்து, எகிப்தைச் சேர்ந்தவர்களும், அல்ஜீரியர்களும் பத்திரமாக வெளியேற அனுமதிக்கப் படும்வரை காங்கோ பிரதமர் ஷோம்பே கெய்ரோவிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார் என ஷோம்பேயிடம் நேரடியாக தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் தூதராலயத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டு காங்கோ அரசாங்கம் முன்வந்திருப்பதாய் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் காங்கோ விமானம் கெய்ரோவில் இறங்குவதற்கு அனுமதி தருமாறு ஐ. அ. குடியரசு அரசாங்கத்தை காங்கோ அரசாங்கம் ஏகட்டுள்ளது. திரு. ஷோம்பே கெய்ரோவுக்கு அயலிலுள்ள ஒரு கிராமத்திலேயே இருக்கிறர்.

## திறைசேரியின் இணக்கம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க குமாஸ்தாக்கள் சேவை சங்கத்தின் பல முக்கிய கோரிக்கைகளுக்கு திறைசேரி இணங்கியுள்ளது. நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா மேற்கொண்ட நடவடிக்கை காரணமாகவே திறைசேரி இவ்வாறு இணங்கியுள்ளது.

## பத்திரிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் கையேற்க வேண்டும் என்று, சபாநாயகரின் இன்றைய தீர்ப்பைத் தொடர்ந்து நடைபெற்ற அரசாங்க கட்சிக் கூட்டத்தில் செய்யப்பட்ட முடிவு பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டதாம்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.